Verification Completed
Sundaram
10/9/64

341

திரு. ஜெ. எல். அனந்தய்யர்,
~~செவ்வாய் பேட்டை~~, ராசிபுரம்
சேலம்.
"வைத்திய அட்டவணை கட்டு 1 5.

341

Sir,
Palm leaves returned
to individual on 28.12.63
31.1.64.

7/2/64

தேதி: 30.12.63.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை கட்டு-1"
உரிமையாளரின் பெயர்: ஜெ.எல்.அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்ப்பேட்டை~~, சேலம். கிச்சிப்பாளையம்.

341 341

ககக

<u>கோடாருடி மாத்திரை காச்சலுக்கு:-</u>

சந்திராளது நேர்வாளம் ஒரு துட்டெடை மொழுகு ஒரு துட்டெடை கழச்சிக்காய் பருப்பு ஒரு துட்டெடை சாதிலிங்கம் ரெண்டு துட்டெடை வெள்ளை, வெங்காரம் பொரித்தது துட்டெடை.க இந்த வகை 4-ம் கல்வத்திலே போட்டு எலுமிச்சை சாறு விட்டு வகை 4-ம் 4-சாமம் அரைத்து மிளகு போலே மாத்திரை கொண்டு முந்து மணி போலே மாத்திரை கொண்டு இஞ்சி கசாயத்திலே கொடுப்பது. மிளகு கசாயத்திலே கொடுப்பது. சுக்கு கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது. குளிர் காச்சல் சன்னி இதுக்கு பத்தியம். புகத்திக் கீரை ஆகாது, நல்லெண்ணை கடுகு, புளி நெய் மிளகெல்லாம் ஆகாது. பூத நசியம் மூக்கிலே போடவும்.

செயிந்த லவணம், செம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு காயம் வகைக்கு விராகனிடை ¼ இந்த வகை ஐந்து எடுத்துப் பொடி செய்து வஸ்திர காயம் செய்து வைத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி தலைப்பாரம் நீர் போகும். பித்த நீர் இறங்கிப் போகும். பூதங்களும் போகும். பிசாசுகளும் போகும். வெறிகளும் போகும்.

<u>அஸ்தி காச்சலுக்கு கசாயம்:-</u>

இதுக்கு வகை முள் கொழுஞ்சி வேர், சுக்கு இது இரண்டும் சமனாய்ப் போட்டுப் பொடி பண்ணி ஒரு படி தண்ணீர் விட்டு அரைப்படி தண்ணீராய்க் காய்ச்சிக் கொண்டு மூன்று பொழுது கொடுத்தால் அஸ்தி காச்சல் போகும். பத்தியம் கரப்பான் சாமான் ஆகாது.

<u>சூலை வாய்வுக்கு பறங்கிப் பட்டை லேகியம்:-</u>

சித்திரமூலம் வேர் ஒரு பலம், பறங்கிப் பட்டை ரெண்டு பலம் ரெண்டு சூரணம் செய்து கொண்டு கோதுமை அரிசி மாவு ஒரு பலம் இந்த மூன்றும் கலந்து கொண்டு இஞ்சி ஒரு சேரு கொண்டு வந்து தண்ணீர் தெளித்து அரைத்து இந்த சாறு 11/8 படி எடுத்துக் கொண்டு கொம்பு தேன்.1½ இந்த இரண்டும் ஒரு எகத்திலே வார்த்து நாட்டு சர்க்கரை மூன்று பலம் போட்டு லேகியம் செய்து கொண்டு சிறுக் கழச்சிக்காய் போலே உருண்டை செய்து கொண்டு ரெண்டு வேளை சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. ஏழு நாளைக்கு புளி ஆகாது. பத்தியம் ஆன பிறகு நெய், தயிர், பால் வெள்ளாட்டு மாமிசம் இது யெல்லாம் யெதேஷ்டமாய் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி சூலைக் கட்டு, வாய்வு, கெண்டை வாய்வு, சூத்து வாய்வு, மூல வாய்வு, அஸ்தி வாய்வு, வகுத்துலே ரெணம், நெஞ்சு வலி இதுகள் யெல்லாம் போகும்.

<u>வலிப்புகளுக்கு எண்ணெய்:-</u>

வேப்பெண்ணை ஒரு படி, புதுச் சட்டியிலே எண்ணை விட்டு நல்ல சங்கங் குப்பி வேரு ஒரு பலம் எடுத்து நூல் செய்து சீலைத் துணியிலே அந்த வேர் வைத்து மூட்டை கட்டி அந்த எண்ணையிலே போட்டு மேலே சட்டி மூடி ஐந்து நாழிகை கழிச்சு நெய் பிசுக்கு வரும் போது இறக்கி விடவும். மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. ஏழு நாளைக்கு புளி ஆகாது.

<u>தீபனத்துக்கு சூரணம்:-</u>

கல்லுப்பு, சயந்த லவண உப்பு, பெருங்காயம், விடாரி வுப்பு அட்டுப்பு, யெவச்சார உப்பு, ஓமம், கடுக்காய், சுக்கு, பெருங்காயம், வாய்விளங்கம், மிளகு, சித்திர மூலம் இந்த வகை 12-க்கு ஒரு துட்டெடை முறைக்கு போட்டுக் கொண்டு சூரணம் செய்து கொண்டு அன்ன தோஷங்களுக்கு நித்தம் சோத்திலே கொஞ்சம் அந்த சூரணம் போட்டு பிசைந்து சாப்பிடவும். இந்தப் படிக்கு மூன்று நாள் சாப்பிடவும். துட்டெடை மாத்திரம் அரை மண்டலம் சாப்பிட்டால் தீரும் வியாதி அரோசிக வாய்வு, சூலை வாய்வும் அசீரணம், பாண்டு வியாதி 6 காச்சல் எல்லாந் தீரும். இது எல்லாம் தீரும். இச்சா பத்தியம் சாப்பிடவும்.

<u>பேதி வாந்திக்கு:-</u>

தண்ணீர் தாகம் எடுத்தால் கசாயம்: வில்வ வேரு மேல் பட்டை எடுத்துப் போட்டு அந்த வேரும், நெல்லு பொரி செய்து கொண்டு அதிமதுரம், சீரகம், சுக்கு, கோஷ்டம் இந்த வகையெல்லாம் பொடி செய்து இரண்டு படி தண்ணீர் விட்டு அரைப்படி தண்ணீராக காய்ச்சி தேன் விட்டு சாப்பிட்டால் பேதி வாந்தி தண்ணீர் தாகம் இது வெல்லாம் நிற்கும் போகும்.

<u>பித்தத்துக்கு லேகம்:-</u>

பருத்திக் கொட்டை இடித்து வைத்துக் கொண்டு நெல்லுப் பொரி செய்து கொண்டு திப்பிலி, யேலரிசி இந்த வகை இரண்டும வறுத்து கொண்டு நல்லா பொடி பண்ணி வைத்துக் கொண்டு நல்ல தேனை விட்டுக் குழப்பிக் கொடுத்தால் பித்தம், நெஞ்சு வலி, வாந்தி, வயத்து வலி இது யெல்லாம் போகும்.

<u>வயத்து வலிக்கு அக்கினி சூரணம்:-</u>

ஓமம் சேர்.½ இந்த ஓமம் நிதங்க மயமாய் வறுத்துக் கொண்டு சூரணம் செய்து கொண்டு நாட்டு சர்க்கரை சேர்.½, கல்லுப்பு செயிந்த லவண உப்பு, விடாரி வுப்பு, அட்டுப்பு, வாலிவ உப்பு, வெடியுப்பு யிந்துப்பு இந்த வகை ஒன்றுக்கு அரை துட்டெடை முறைக்குப் போட்டுக் கொண்டு இந்த வகை யெல்லாம் சூரணம் செய்து முன் சூரணத்திலே

சர்க்கரையிலே இந்த வகையெல்லாம் கூட்டி வைத்துக் கொள்ளவும். தட்டெடை மாத்திரம் இரண்டு வேளை சாப்பிட்டால் இருமல் வியாதி, வயத்து வலி, பித்த குன்மம், வாய்வுச் கட்டி, சாரை வாய்வு, சாரை ஊத்தல், இடுப்பு வலி, அசீரணம் இந்த வியாதி யெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் கோழி ஆகாது. பறங்கிக்காய் ஆகாது. நல்லெண்ணெ ஆகாது. அகத்திக் கீரை ஆகாது. இந்த வகை நாலும் ஆகாது. இதுக்கு பசு மாட்டு நெய், வெள்ளாட்டு மாமிசம், தயிர், பால் இது யெல்லாம் மெத்தெட்டமாய் சாப்பிடவும். இந்த முறை கை கண்ட முறை.

<u>வயத்து வலிக்கு கசாயம்:-</u>

ஓமம், சீரகம், கல்லுப்பு இந்த வகை மூன்றும் கசாயம் போட்டு கொஞ்சம் போலே இறுத்துக் கொண்டு தேனை விட்டு சாப்பிடவும். வயத்து வலி தீரும்.

<u>குளிர் காச்சலுக்கு பாசான மாத்திரை:-</u>

வெள்ளைப் பாசாணம் ஒரு விராகனெடை எடுத்து பாவக் காயுள்ளே வைத்து சீலை மண் செய்து ஒரு நாழிகை காய வைத்து இரண்டு சின்ன விரட்டியாலே புடம் வைக்கவும். இந்தப் படிக்கு ரெண்டு புடம் வைக்கவும். லவங்கம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, தெசாவரம் விராகனிடை.க, சித்தரத்தை விராகனிடை.க கிராம்பு விராகனிடை.க இந்த வகை யெல்லாம் கல்வத்திலே போட்டு பாவக்காய் சாறு வாங்கி இந்த சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு மிளகு போலே மாத்திரை செய்து கொண்டு மிளகுப் போலே மாத்திரை செய்து கொண்டு மிளகு கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. சுக்கு கசாயத்திலே கொடுப்பது. சித்தரத்தை கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது. கொத்தமல்லிக் கசாயத்தில் கொடுப்பது. கொம்புத் தேன் நெய்யிலே உரைத்துக் கொடுப்பது. பத்தியம் நெய், நல்லெண்ணை, புளி, மாமிசம் அகத்திக் கீரை ஆகாது.

<u>பேதிக்கு எண்ணை:-</u>

இதுக்கு வகை விளக்கெண்ணை படி ஒன்று, சதிரக் கள்ளி பழம் வீசம் படி, கள்ளிப் பட்டை சேர் ஒன்று, வெள்ளறுகஞ் சாறு வீசம் படி, கடுகுரோகணி சேர் ஒன்று கடுக்காய்ப் பொடி சேர் அரைக்கால் இந்த வகை யெல்லாம் பொடி செய்து கொண்டு அந்த எண்ணையிலே போட்டு பாகமாய்க் காய்ச்சிக் கொண்டு இறுத்துக் கொண்டு ஒரு யெனத்திலே வைத்துக் கொண்டு சின்னக் கரண்டியாலே அந்த எண்ணை எடுத்துச் சாப்பிட்டால் பத்து வாட்டி பேதி ஆகும்.

<u>தெரியாமல் சாப்பிட்டால் அதுக்கு கசாயம்:-</u>

கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், அக்கிராக் காரம், வசம்பு, சம்பளம் இந்த வகை கசாயம் சாப்பிட்டால் நின்று போகும்.

<u>எப்படிப் பட்ட காச்சலுக்கும்:-</u>

பாதரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைக் காரம், நாபி, மிளகு, சுக்கு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், தாளகம் இந்த வகை பதினெட்டு வகை ஒன்றுக்கு ஒரு விராகனிடை முறைக்கு போட்டுக் கொண்டு சுத்தி செய்து அரைத்து நேர்வாளம் பத்து விராகனிடை இந்த யெல்லாம் வடிகொண்டு அரைத்துக் கொண்டு மிளகு போலே மாத்திரை செய்து கொண்டு மிளகு கசாயத்தில் உரைத்துக் கொடுப்பது. சுக்கு கசாயத்திலே கொடுப்பது. சீரகம் கசாயத்திலே கொடுப்பது, இஞ்சிக் கசாயத்திலே கொடுப்பது. தேனிலே கொடுப்பது. இதுக்கு பத்தியம் புளி ஆகாது. நல்லெண்ணை ஆகாது. கடுகு ஆகாது. தீரும் வியாதி காச்சல், சுரசன்னி, குளிர் காச்சல் மூன்று முறைக் காச்சல் இது யெல்லாந் தீரும்.

<u>இருமலுக்கு ரூபாவதி மாத்திரை:-</u>

கற்கடக சிங்கி, சீரகம், செவியம், கோஷ்டம், மூதா காசம், கொத்தமல்லி, முந்திரி பழம், பேரீச்சம் பழம், உத்தாமணி தந்கோலம், லவங்கப் பத்திரி, ககநீறு, திப்பிலி, சந்தனக் கட்டை, பேய்ப்புடல், ஆடாதொடை, கண்டங்கத்திரி, முக்காவேளை, நெல்லிக்காய்ப் பருப்பு, நெல்லுப் பொரி இது வகை ஒன்றுக்கு ரெண்டு தட்டெடை முறைக்குப் போட்டு இடித்துக் கொண்டு சூரணம் செய்து கொண்டு (சூரணம் இது நாலு சாமம்) நாட்டு சர்க்கரை சேர்த்துக் கொண்டு தட்டு மாத்திரம் ரெண்டு வேளை சாப்பிட்டால் எப்படி பட்ட இருமலும் போகும். இதுக்கு பத்தியம் மூன்று நாளைக்கு புளி ஆகாது.

<u>வாய்விகளுக்கு மாத்திரை:-</u>

சயித்த லவணம், யெவச்சாரம், திரிகடுகும், பழவரை பற்பம், ஓமம், கற்கடக காய், பெருங்காயம், இந்த வகை ஒன்று ரெண்டு தட்டெடை போட்டு சூரணம் செய்து கொண்டு ராவில் புடம் வைக்கவும். கருப்பு வெத்திலை வாட்டிச் சாறு வாங்கி அந்த சூரணத்திலே விட்டு அரைத்துக் குன்றி மணி போலே உருண்டை செய்து கொண்டு நிழலிலே உலர வைத்து சுக்கு கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. இஞ்சி கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. இதுக்குத் தீரும் வியாதி சாரை வாய்வு, ஊத்து வாய்வு, கெண்டை வாய்வு, அண்ட வாய்வு, மூல வாய்வு, சகலமான வாய்வு கரும் போகும். இதுக்கு இச்சா பத்தியம்.

பாண்டுவுக்கு மருந்து:-

கழச்சிக் காய்ப் பருப்பு எடுத்துக் கொண்டு பாவக்காய் சாறு விட்டு அரைத்து கழச்சிக்காய் போலே உருண்டை செய்து மூன்று நாளைக்கு ரெண்டு வேளை சாப்பிடவும். இதுக்கு பத்தியம் ஏழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. பாண்டு போகும்.

பேதிக்கு உருண்டை:-

சுத்தி ஆனை நேர்வாளம் ஒரு துட்டெடை மிளகு, ரெண்டு துட்டெடை இந்த ரெண்டும் கல்வத்திலே போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு சுண்டைக்காய் போலே உருண்டை செய்து கொண்டு குண்டு மணி போலே உருண்டை செய்து மிளகு போலே உருண்டை செய்து கொண்டு சுக்கு, கசாயத்திலே உரைத்துக் கொடுப்பது. பேதிக்கும் தயிரும், சோறும் சாப்பிட்டால் நிற்கும் போகும்.

பழவரைக் கட்டிக்கு: ரச கற்பூரம் மருந்து:

ரச கற்பூரம் பத்து விராகனெடை கொண்டு வந்து நல்ல சங்கங் குப்பி பழம் கொண்டு வந்து சாறு வாங்கிக் கொண்டு அந்த ரச கற்பூரம் ஒரு பாத்திரத்திலே வைத்து அந்த பழச் சாறு விட்டு நாலு சாமம் சுருக்கு------ச்சு கொண்டு மேல் பழச் சாறு விட்டு நாலு சாமம் ~~////~~ அரைத்துக் கொண்டு சுண்டைக்காய் போலே உருண்டை செய்து குண்டு மணி போலே உருண்டை செய்து மிளகு போலே உருண்டை செய்து கொண்டு விளக்கெண்ணெயில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுப்பது. கடினமாய் பத்தியம் ஏழு நாளைக்கு எப் பேர்ப் பட்ட பழவரைக் கட்டியும் போகும்.

மூலக் கட்டுக்கு கசாயம்:-

கருதலை வேர், நாற சங்கங் குப்பி வேர், நல்ல சங்கங் குப்பி வேர் இந்த வகை ஒன்றுக்கு சேர் அரை முறைக்கப் போட்டுக் கொண்டு மிளகு மூன்று துட்டெடை, சீரகம் ஒரு துட்டெடை இந்த வகை யெல்லாம் பொடி செய்து கொண்டு ஒரு பாத்திரத்திலே போட்டு எட்டு படி தண்ணீர் வைத்து ஒரு படியாய்க் காய்ச்சிக் கொண்டு இந்தக் கசாயம் அரைக்கால் படி எடுத்துக் கொண்டு பறங்கிப் பட்டை அரை துட்டெடை சூரணம் செய்து இந்த சூரணம் அந்தக் கசாயத்திலே போட்டுச் சாப்பிடவும். இந்தப் படிக்கு நாள் ஒன்றுக்கு ரெண்டு வேளை சாப்பிடவும். இந்தப் படி மூன்று நாளைக்குச் சாப்பிடவும். இதுக்கு பத்தியம் ஏழு நாளைக்கு புளி ஆகாது. இதுக்குத் தீரும் வியாதி மூலக் கட்டு, மூல வாய்வு, சாரை வாய்வு, குத்த வாய்வு, கெண்டை வாய்வு இது வெல்லாம் போகும்.

மேக கட்டுக்கு அமிர்தாதி சஞ்சீவி எண்ணை:-

சித்தாமணிக் கொட்டை இருந்த படி கொட்டை கொண்டு வந்து பானையிலே போட்டு இளநீர் ரெண்டு படி ஆவாரங் கொழுந்து தழை, கம்பந் சோத்துத் தண்ணீர் இந்த மூன்றும் அந்த பானையிலே போட்டு வேக வைத்து நிழலிலே உலர வைத்து இடித்து பானையிலே போட்டு இந்தப் பானையிலே கம்பம் சோற்றுத் தண்ணீர் இளநீர் அரைபடி பொன்னாங்காணிச் சாறு அரைபடி கரிசலாங் கண்ணி சாறு அரைப்படி, வல்லாரைத் தழைச் சாறு அரைப்படி சீமாநெல்லித் தழைச் சாறு அரைப்படி ஆவரம் வேர் பட்டை நாலு சேர், பட்டை பானையிலே போட்டு பச்சைத் தண்ணீர் நாலுபடி தண்ணீர் சுத்தி அரைப்படி தண்ணீராய்க் காய்ச்சிக் கொண்டு அந்த பானையிலே இந்த தண்ணீர் சுத்தி அருப்பு மேலே வைத்து கிளறி விட்டு நல்லாய் காய்ச்சி எண்ணை இறக்கவும். இந்த எண்ணையிலே குங்குமப்பூவு ஒரு விராகனெடை நல்லாப் பொடி செய்து அந்த எண்ணையிலே போடவும். நாள் ஒன்றுக்கு துட்டெடை மாத்திரம் கொண்டு வேளைக்குச் சாப்பிடவும். தீரும் வியாதி மேக குருகற்பருடு, அஸ்தி மேகு மூலகுரு வெள்ளை விழுந்தால் ரெத்தம் விழுந்தால், சீழ் விழுந்தால் இது வெல்லாம் போகும். இதுக்கு இச்சா பத்தியமாய்ச் சாப்பிடவும். ~~////~~

சன்னிக்கு மாத்திரை கண்ணுக்குக் கலிக்கம் போடவும்:-

பெருங்காயம் விராகனிடை.உ, சயிந்த லவணம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, இந்த திப்பிலி வகைத்துக் கொண்டு இந்த மூன்றும் போட்டு பசு மாட்டு நெய் விட்டு நாலு சாமம் அரைத்துக் கொண்டு மாத்திரை செய்து கொண்டு முருங்கத் தழை சாற்றிலேயாவது வெந்நீரிலேச் சாற்றிலேயாவது மோரிலே பாலிலே யாவது உரைத்து கண்ணிலே கலிக்கம் போடவும். சன்னி போகும். வெளிச்சுருக்கும் ஆகும். தலைவலி போகும். பித்தம் இறங்கும். ஒரு கலிக்கம் போட்டால் (விசருபாய் வாங்கவும்).

பெரிய பத்தை சூரணம்:-

பெரிய மரம் பயத் தழை கொண்டு வந்து உலர வைத்து சூரணம் செய்து இந்த சூரணம் சேர் ஒன்று நாட்டு சர்க்கரை சேர் அரை இந்த இரண்டும் கலந்து கொண்டு ரெண்டு வேளையும் துட்டெடை சாப்பிடவும். இந்தப் படிக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் நாடியில்லாதே யிருந்தால் நாடி உண்டாகும். விந்து விடாது. சரீரம் கெட்டியாகும். காயம் சித்தி நல்ல படிக்கு ஆகும். இந்த சூரணம் சேர் ஒன்றுக்கு ரெண்டு ரூபாய் வாங்கிக் கொள்ளவும்.

பூசணிக்காய் லேகியம்: உடம்பு ஏற்றுகைக்கு:-

மிளகு பலம் ஒன்று, சாதிக்காய் பலம் ஒன்று, சீரகம் பலம் ஒன்றரை, சாபத்திரி பலம் ஒன்று, ஏலஅரிசி பலம் ஒன்று, சிராம்பு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, தெசாவரம் ஒன்று ஓமம் பலம் ரெண்டு, பநீர் பலம் ஒன்று, வெட்டி வேர் பலம் ஒன்று தேத்தாங் கொட்டை பலம் ஒன்று, கசகசா பலம் ரெண்டு, சன்ன லவங்கப் பட்டை

ஒன்று, லவங்கப் பத்திரி பலம் ஒன்று, சுக்கு பலம் ஒன்று, சித்தரத்தை பலம் ஒன்று, கொத்தமல்லி பலம் ஒன்று இந்த வகைகளைக் கொண்டு வந்து பொடி செய்து கொண்டு நெறவா வந்தக் கொண்டு அரைத்து வஸ்திர காயம் செய்து கொண்டு சாம்பல் பூசணிக்காய் கொண்டு வந்து சுமலை கறலையாய். அதக்கு இடிச்சு இந்த சாறு படி ஒன்று பசு மாட்டுப் பால் படி முக்கால் இந்த இரண்டும் ஒரு பாத்திரத்தில் ஊற்றி அரைப் படியாய்க் காய்ச்சிக் கொண்டு இதிலே கொம்புத் தேன் கால்படி, பசு மாட்டு நெய் காலே அரைக்கால் படி இந்த இரண்டும் ஊற்றி இதிலே நாட்டு சர்க்கரை சேர் ஒன்றே கால் இந்த சர்க்கரை போட்டு பாகு போலே காய்ச்சிக் கொண்டு மூன்று தரம் எடுத்து இதிலே போட்டு லேகம் செய்து கொண்டு சின்ன கழற்சிக்காய் போலே உருண்டை செய்து கொண்டு ரெண்டு வேளை சாப்பிட்டால் தீரும் வியாதி அஸ்திக் காய்ச்சல், மூலச் சூடு, மூல வாய்வு, கை கால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, மந்த காசம் இருமல், தலைவலி, நேத்திரக் கருப்பு, சோபைகளும் இந்த லேகம் ஒரு [illegible] மண்டலம் சாப்பிட்டால் சகலமான வியாதிகளும் தீரும். கை கண்ட முறை.

<u>மேக ஊறலுக்கு மேகத்துக்கு எண்ணெய்:-</u>

சோத்துக் கத்தாழை கொண்டு வந்து இடித்து ஒரு பாத்திரத்திலே போட்டு இதிலே கடுக்காய் பொடி செய்து போட்டால் சாறு வாங்கி கரு வேலங் கை காய் கொண்டு வந்து இடித்து சாறு வராது. அந்த சோத்துக் கத்தாழை சாறு விட்டு மசித்து ஏழு நாழிகையில் பிறகு சாறு வாங்கிக் கொண்டு இந்த சாறு ஒன்றரை படி செங்கழனிக்காய் பூவு இலை இந்த வகை மூன்றும் கொண்டு வந்து தண்ணீர் தெளித்து இடித்து வெள்ளருக்கு சமூலம் கொண்டு வந்து இடித்து சாறு முக்கால் படி மணத்தக்காளிச் சாறு முக்கால் படி, கொவ்வை தழை கொண்டு வந்து இடித்து இந்த சாறு முக்கால் படி ஈர வெங்காயம் சாறு ஒரு படி இந்த வகை யெல்லாம் பாத்திரத்திலே விட்டு இதிலே விளக்கெண்ணெய் ரெண்டு படி சட்டி அடுப்பு மேல் வைத்து மெழுகு பதமாகக் காய்ச்சிக் கொண்டு இறக்கிக் கொண்டு ரச கற்பூரம் ரெண்டு வராகனிடை கல்வத்திலே வைத்து அந்த எண்ணெய் விட்டு ஏழு நாழிகை அரைத்து எடுத்து அந்த எண்ணெய் விட்டு கலக்கி விட்டு பெரிசு வாங்கிக் கொள்ளவும். இரண்டு வேளை காசிடை மாத்திரம் நித்தம் சாப்பிட்டால் தீரும் வியாதி கருங் குஷ்டம், வெள்ளை குஷ்டம், வச மேகம் போகும். பத்தியம் மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. நெய் பால் யெதேஷ்டமாய் சாப்பிடவும்.

<u>விந்து விடாத விந்து கட்டும்:-</u>

சாதிக்காய் ஒன்று, கிராம்பு, வால்மிளகு இந்த மூன்றும் பொடி செய்து கொண்டு முத்தின முருங்கை மரம் வேர் பறித்து அந்த வேர் துளை செய்து அந்த வகை மூன்றும் அதுக்குள்ளே வைத்து அந்த வாய் மூடி சீலை மண் செய்து போட்டு பத்து நாள் ஆன பிறகு எடுத்துக் கொண்டு இதை எடுத்து மிளகு போலே, சாதிக்காய் சாப்பிட்டால் ஒரு சாமம் விந்து விடாது. கண்டைக்காய் போலே சாப்பிட்டால் விந்து விடும்.

<u>எலி கடிக்கு மருந்து:-</u>

சித்தரத்தை அட்டெடை ஓமம் அட்டெடை உக்கு நடடெடை இந்த மூன்று வகை கொண்டு வந்து கல்வத்திலே போட்டு முருங்கைப் பட்டை சாறு விட்டு அரைத்து இலந்தைக் காய் போலே மூன்று உருண்டை செய்து மூன்று நாள் சாப்பிடவும். மூன் வகையாய கசாயம் வைத்து மூன்று நாள் சாப்பிடவும். ஏழு நாளைக்கு புளி ஆகாது. எலி கடி விடம் போகும்.

<u>மேகத்துக்கு எண்ணெய்: இதுக்கு வகை:-</u>

களச்சித் தழை, செம்முள்ளி சுடு தொரட்டி சங்கங் குப்பி, நொச்சி வேர், கண்டங்கத்திரி, திப்பிலி அமுரி படி.ஃ, புன்னைக்கு தாமரை விதை, ஆவரங் கொழுந்து, கரிசிலாங் கண்ணி, விராங் கொழுந்து, ஈர வெங்காயம், கடைச் சரக்கு அதிமதுரம், முதைக் காய், சாதிக்காய், கிராம்பு, கோஷ்டம், கோரோசனை, சுக்கு, வெந்தயம், கார்போகரிசி, விளாவரி, மரமஞ்சள், சீரம் மிளகு, சித்தரத்தை, நேர்வாளம் கொட்டை வராகனிடை.6., கசகசா, வாய்விளங்கம், கொத்தமல்லி காமபூ, சித்தா மணக்கு வேர் வகை ஒன்றுக்கு ரெண்டு பலம் முறைக்கு போட்டு பொடி செய்து கொண்டு கடை செலவு வகை ஒன்றுக்கு அரைப் பலம் முறைக்குப் போட்டுப் பொடி செய்து கொண்டு நல்லெண்ணெய் இரண்டு படி ஒரு பாத்திரத்திலே வைத்து இதிலே இளநீர் அரைப்படி வார்த்து அந்த வகை யெல்லாம் போட்டு மெழுகு பதமாக காய்ச்சிக் கொண்டு பெரிசு வாங்கிக் கொள்ளவும். புளி ஆகாது.

-*-*-*-*-

முற்றும்

--*-*

க.ச: 31.12.63.

தேதி: 3.1.1963.
ஓலைச் சுவடியின் பெயர்: "சை முறை வைத்தியம் நஞ்சு முறிவு நூல் கட்டு-5."
உரிமையாளரின் பெயர்: ஜே.எல்.அலர்சய்யர்.
இடம்: செவ்வாய்பேட்டை, சேலம்.

***

இதன் கண் மருந்துகள் மட்டும் எழுதப்பட்டன.

<u>பாம்பு விஷந்துக்கு மருந்து:-</u>

மாவிலிங்க மரத்துச் சிராயை எலுமிச்சங் காய்ளவு அரைத்து புழுங்கலரிசியில் பால் சோறுக்கி உண்ணக் கடிச்ச பாம்பு சாகும். இந்த மருந்து முக்காலாக்கித் தின்னவும்.

<u>ஊள் மருந்து:-</u>

வட்டத் திருப்பி வேர், சீந்தில் கொடி, பெருகா மிட்டி யிலை, பெருங் குறிஞ்சா வேர், பேய்ப்பீர்க்கன் சடு ஆடு தின்னாப் பாலைக் கிழங்கு, பேய்ப்புடலை வேர் கண்டு இந்த மருந்தெல்லாம் கொ.ண்டு வந்து உரலில் அலைத்து நாள் பண்ணிக் கொண்டு எந்தப் பாம்பு கடித்தாலும் காடியில் கரைந்தக் கொடுக்க எடுக்கு மீண்டு இந்தப்படி கொடுக்கவும். மாவிலங்கை வேர், புளியம் பிரண்டை, நல்ல பிரண்டை, காட்டுக் கறளை கார்த்திகை கிழங்கு இது வெல்லாம் அரைத்து மோருடன் குடிக்கவும். தீர்

<u>பாம்புக்குத் ஊள் மருந்து:-</u>

பேய்ப்பீர்க்கு, சமூலம் உலர்த்தி நாள் பண்ணி நல்லெண்ணெயில் குடிக்க விஷம் தீரும்.

வெள்ளை வெங்காயம், வசம்பு, பெருங்காயம், சிறு நீரிலரைத்து உச்சிக்குத் தேய்க்கவும். நாசி காது வாயிலும் வார்க்கவும். கீழா நெல்லி வேர் சமூலம் அரைத்து நல்லெண்ணெயில் குடிக்க விஷந் தீரும்.

குப்பை மேனியிலையை அரைத்துக் காடியில் குடிக்க எல்லா விஷமுந் தீரும். நல்ல முசுட்டை எலுமிச்சங் காயளவு அரைத்து தண்ணீரில் குடிக்க விஷந் தீரும். நாய்ப் பாகல் வேர் சிறு நீரிலரைத்துக் குடிக்க விஷ தீரும். குதிரை வாலி வேர் அரைத்து வெந்நீரில் குடிக்க விஷந் தீரும்.

<u>பாம்புக்கு அஞ்சனம்:-</u>

சாட்டறணை சுத்தி வரக் குழி பறித்து பனிரெண்டு நாள் ஒவ்வொருக்கு இருந்து அந்த வேரைப் பிடுங்கி வந்து வெள்ளாட்டுக் கோமியத்தில் மூன்று நாளூறப் போட்டு எடுத்து பத்து மிளகும் உப்பும் கூடப் போட்டு அரைத்து அஞ்சனமிடவும்.

ஒன்று பிச்சு அஞ்சு பச்சைப் பாம்பு பிச்ச அஞ்சு மிளகு அன்பது பெருங்காயம் ஐந்து, நேர்வாளம் கழஞ்சு, திப்பிலி களஞ்சு, திப்பிலி மூலம் ஐந்து, இந்த மருந்தெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சிறு நீரிலாவதுதல் எலுமிச்சம் பழச் சாறுதல் உரைத்து அஞ்சன மிடவும். மிளகு உப்புக கூடப் போட்டு அரைத்து உருண்டை செய்து வைத்துக் கொண்டு சிறு நீரி லரைத்து அஞ்சனமிடவும். புங்கம் விரை, விராலிரை, பேய்ப்பீர்க்கம் விரை, எலுமிச்சம் விரை, மிளகு, சுத்தம் துரிசு, நேர்வாளம், தன்னி மொக்க நிறுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு, பேய்ப்பீர்க்கஞ் சாறு வார்த்து அரைத்து வேப்பம் விரைப் பிரமாணம் குளிகை செய்து விஷந் தீண்டினால் உரைத்துக் கண்ணிலிட விஷந் தீரும்.

வெற்றிலைச் சாறு, குப்பை மேனிச் சாறு, துளசிச் சாறு இந்த மூன்றுந் தலைச்சு தனிச் சாறாகப் பிழிந்து கொண்டு பிரமமீ களத்தி மறிச்சுக் கொண்டு நிழலுலர்த்தியாகக் கொண்டு உருண்டை செய்து விஷந் தீண்டினால் தலையிலே கீறிக் கட்டவும். விஷந் தீரும். இது கை கண்டது. பாம்பு கடித்து தலை மண்டைக் கொண்டால் அதிரம் போட்டு அதின் மேலோ விட்டு துளசிச் சாறு விட்டு மந்திரித்தால் விஷம் தீரும். விஷந் தீண்டினால் பழுபாகல் கிழங்கு வாயிலடக்கி விரு காதவழி போகலாம். அவரைச் சாறு கொடுக்க தீரும். குப்பைப் புன்னைக்கு மிளகு பேய்ப்பீர்க்கிச் சாற்றி லரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும். நீரில் சிறு நீரிலரைத்து நசியமிடவும். கருங் கோழிக்கு காரெள்ளு மேய்ச்சு சிறுநீர் குடிப்பித்து எச்சமிட்ட பிறகு எடுத்து நீர் கழுவி விட்டு அம்மியிலரைத்து உருண்டை பண்ணிக் கண்ணிலிட தீரும். அமுக்கிரா வேர் நொச்சிக் கொழுந்து வேப்பங் கொழுந்து இது மூன்றும் சமன் கொண்டு நிழலில் உலர்த்தி பொடியாக்கி அன்றாடம் ஒரு வெருகடிப் பிரமாணம் நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொள்ளவும்.

<u>விரியன் கடிக்கு மருந்து:-</u>

மலைதாங்கி வேரும் இலையும் இன வெந்நீரில் குடிக்கவும். வாழை வேரும இலையும் வெந்நீரில் குடிக்கவும். நக்கிரட்டை வேர் அரைத்து கொட்டைக்காய் மலவாதி தின்று மேலும் பூசவும். மலை தாங்கி வேரும் இலையும் விழுதி வேர், பிரண்டை வேர், சீந்தி தண்டு இலையும் தனித் தனியே இன வெந்நீரில் குடிக்கவும். உடம்பு வீங்கினால் விழுதியிலையை வேக வைத்து கட்டுந்து உடம்புக்குப் பனி வீக்கத்தில் கட்ட வீக்கம் வாங்கும். நிலக் குமிள் வேர், சிறுந்தி கரு அழுக்கிராம் நாதவளை வேர் கடிவாயில் பூசவும். புளிக் கரணைக் கிழங்கு சதிரக் கள்ளிப் பாலாட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு கள்ளிப் பால் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி இன வெந்நீரிலரைத்துக் கடி வாயிலிடவும். உள்ளுக்குங் கொடுக்கவும். காஞ்சொறி வேரும் இலையும் நரிப் பயத்தம் வேரும் இலையும் சீந்திக் கொடியும் இந்த மூன்றும் அரைத்துச் சிறு நீருடன் கொடுக்கவும். தேத்தான் வேர் நரி விரா வேர் எள்ளை வார்த்து அரைத்துக் காத்தாலே கொள்ளவும். குளியம் தீரும்.

<u>விரியன் கடிக்கு நசியம்:-</u>

மூக்காடன் செவியும் தும்பையும் ஒருக் கட்டைப் பரு வசம்பு நறுக்கிச் சிறு

நீருடன் கூட வைத்து நசியம் பண்ணவும். காட்டு முருங்கை பட்டை பலம்.¼, அவிஞ்சித் தழை ஒரு பிடி, சங்கங் குப்பை, குப்பை மேனி, வசம்பு, வெள்ளைப் பூண்டு சிறுநீர் விட்டு மத்தித்து நசியம் பண்ணவும். உப்பு, புளி தவிர்க்கவும். மூட் காவளை வேரும் மிளகரணை இலையும் நரிப் பயத்த இலையும் கத்தாழைச் சாறு கோழி முட்டை வார்த்து அரைத்துக் கட்டவும்.

__விரியனுக்கு_வாய்_மருந்து:-__

மிளகு கருங் கொட்டைப் பருப்பும் வைத்துத் தின்னவும். விஷந் தீரும். கடப்பம் விரையும் கூளக் கொட்டைப் பருப்பும் பாக்குடன் தின்னவும். குணமாம். வேப்ப முத்தும் உள்ளி, வசம்பும், மிளகு, இந்த ஐந்து மருந்தும் சரி சமன் கட்டி அரைத்து உருண்டை பண்ணி வெந்நீர் வேண்டின் பெருக்குச் சி நீரில் நசியம் விடவும். அல்லது சிறுநீரில் உரைத்துக் கொதிக்க வைத்து இடவும். அல்லது இள வெந்நீரில் குடிக்கவும். பொருமி வேரும் விழுமி வேரும் அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். தலை மண்டை கொண்ட விஷந் தீரும். புங்க மரத்தைத் துளைத்து அதிலே கொட்டை வாங்கிய புளியை அடைத்து வருஷம் சென்ற பின்பு புளியை எடுத்து உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொம்பு ஒரு உருண்டையை நல்லெண்ணெயில் குடிக்கவும்.

__விஷத்துக்கு:-__

எட்டிப்பட்டை, எருக்கம் பட்டை, நீலி வேர் மணத்தக்காளிச் சாறு விட்டு அரைத்து சின்ன சுண்டைக் காயளவு உருண்டை செய்து வெந்நீரில் குடிக்கச் சகல விஷமும் போகும். விஷ பாகம் போகும்.

__பூச்சு_மருந்து_தலைக்கு:-__

சீந்திக் கிழங்கு பால் வார்த்து அரைத்து தலைமேலிடவும். கையாந்தகரை இலை பொடுதலை கஞ்சாங் கோரை அவரை இலை, வேலையிலை, முருங்கை இலை பிரண்டைத் தண்டு, விளாவிலை மணத்தக்காளி இலை இது அவைத்து தலைமேலிடவும்.

__எலி_பல்:-__ பாம்புப் புற்று வெச்சம் வல்லால் விட்டை வேரிலாக் கொத்தால் இவை நல்லெண்ணெயிலாக்கி யிடவும்.

__பல_விஷத்துக்கு:-__

இலைக் கிராய், அப்பைக் கிழங்கு தாள் பண்ணி வைத்துக் கொண்டு இள வெந்நீரில் குடிக்கவும். அழிஞ்சி விரையும் பேய்ப் பீர்க்கம் விரையும் கழுதை எலும்பும் முயல் எலும்பும் இவை யெல்லாம் கட்டி தாவி மிறக்கி எரித்துக் கொண்டு இந்தத் தயிலம் வசம்பு கட்டி உரைத்து ஒருச் கொட்டைப் புரு மிளகு கட்டி நருக்கி நசியம் பண்ணவும்.

கழுதைத் தும்பை வேரும் வெற்றிலையும் நசுக்கி சிறுநீரில் நசியம் விடவும்.

__பல_விஷத்துக்கு:-__

நல்ல பீர்க்கம் விரை அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். இரைத்துத் தடவவும். மாதளம் விரை அரைத்துப் பாலுடன் குடிக்கவும். வெள்ளைச் சாக்கலம் வேர் பாக்கு வெற்றிலையுடன் தின்னவும்.

தளசியரா வேரும் ஒரு.க கொட்டை பூண்டும் வசம்புக் கட்டி காடி வார்த்து நசுக்கக் கொடுக்கவும். மேலும் பூசவும். வேம்பிலும் பொரிசல் பட்டை வேரை அரைத்து நல்லெண்ணெயில் வேக வைத்து பூச வீக்கம் போம்.

__நாகப்_பாம்புக்கு:-__

எருக்கம் பாலும் கருப்புக் கட்டியும் தின்னவும். நீர்ப் பூலாம் வேரும் பொன்னாங் கண்ணி வேரும் சீதேவி செங்கா நீர் வேரும் சுக்கு, வசம்பு, வெள் வெங்காயம் இவை அரைத்துக் கொடுக்கவும்.

__மூக்கை_பாம்புக்கு:-__

வக்கலைக்கு திங்களில் காப்புக் கட்டி செவ்வாயில் பலி கொடுத்து வேர் பிடுங்கிச் சுளிசு மாடு இது தகையிலிட்டு இரைக்கத் தடவித் தண்ணீரில் போட்டுக் குடிக்கவும்.

__சுருட்டை_சாரங்கி_முக்குருக்கு:-__

கள்ளி வேரும், சுண்டை வேரும் அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். நொச்சி இலை சாறுக்குழம் சி நீருடன் குடிக்கவும்.

__கடி_வாய்க்கு_மருந்து:-__ கோழி ஈரல் வாங்கிக் கடிவாயில் வைத்துக் கட்டவும்.

__பாம்புக்கு_எல்லா_மருந்து:-__

முற்றிய தேங்காய்த் தண்ணீர் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு தேங்காய்த் தொட்டியை அரைத்து கலந்து பொட்டணம் கட்டி சிறுகப் பிழிந்து நேர்வாளப் பருப்பு இரண்டு விராகனிடை பருப்பும் இரசம் குன்றி அளவு கடைப் போட்டு குளிசம் கல்லில் அரைத்து இப்படி இரசமும் நேர்வாளம் பருப்பும் எட்டு விராகன் பத்து விராகன் கட்டி அரைத்து சிமிழிலடைத்து நல்லெண்ணெ தீண்டாமல் வைத்திருந்து விஷந் தீண்டினால் என்ன மருவாதி நாக்கில் தடவிக் கடிவாயில் இந்த மருந்து இடும் போது சீவன் இருக்கிறதுக்கு அடையாளம் தலை மயிரைக் கையிலே பிடுங்கி பார்க்க வராதிருந்

நடுத் தலையில் வசேயமுடைத்துக் கீறிக் கை மடிப்பிலுங் கீறித் திடவும். இது கை கண்டது. இந்த மருந்து எட்டி அலரி ஒரு சோளப் பயிர் வீரியன் கடி எலி கடி மசை நாய் கடி நரி கடி வண்டு கடி, சட்டம் இந்த வகைக் கெல்லாம் கருப்புட்டியில் வைத்து வைத்து விழுங்கவும். கள்ளி வேர் ரெண்டு உகாய் வேர் ரெண்டு நீர் வார்த்தரைத்து பூசவும். கெருடன் கிழங்கும் சிறு குறிஞ்சா வேர்ப் பட்டை விழுப்பி வேர் அழிஞ்சி வேர் சொன்மறப் பட்டை பொரிசல் பட்டை இடித்துச் சூரணம் பண்ணி வெந்நீரில் கொடுக்கவும். உதிர மண்டல கடிக்கும் வாயில் ரெத்த மெடுக்கும். மயிர்க் கால் ரெத்தம் பாயும். உடனே விழுவான். இதற்கு சங்கங் குப்பி வேர், சிறு உகாய் வேர், வேளை வேர், சிறுகீரை வேர், மல்லிகை வேர், குப்பை மேனி இந்த ஆறு மருந்தும் சமனாக இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும்.

பாம்புக்கு குளிகை:-

எட்டிப் பட்டை பலம்.உ, எட்டித் தழை எலுமிச்சங் காயளவு கொழுந்து எலுமிச் எலுமிச்சங் காயளவு குருகம் பட்டை பலம்.உ, தழை எலுமிச்சங் காய் அளவு கொழுந்து அத்தப் பிரமாணம் அலரிப் பட்டை பலம்.உ தழையும் கொழுந்தும் எலுமிச்சங் காயளவு ஒரு திருப் பாலை பலம்.க, மருக்காரைப் பட்டை பலம்.க, கோட்டு மருக்காரை பலம்.க, ~~மருக்காரைப்-பட்டை-பலம்.க,~~ அர்சல் பட்டை பலம்.க, வெப்பாலைப் பட்டை பலம்.க, பொரிசல் பட்டை பலம்.க, நத்தியட்டான் பட்டை பலம்.க, வெள்ளறுகு சமூலம் பலம்.க, சங்கங்குப்பிப் பட்டை பலம்.க, புன்கம் பட்டை பலம்.க, சுண்டைப்பட்டை பலம்.க, கொளிஞ்சிப் பட்டை பலம்.க, அப்பைக் கிழங்கு பலம்.க, கெருடன் கிழங்கு பலம்.க, சிரிப்பட்டை பலம்.க, இசங்கிக் கொடி பலம்.க, சீந்திக் கொடி பலம்.க, சிறுகுறிஞ்சாப் பட்டை பலம்.க, பெருங்குறிஞ்சாப் பட்டை பலம்.க, குப்பை மேனிப் பட்டை பலம்.க, அமுக்கிராங்கிழங்கு பலம்.க, காளப் பட்டை பலம்.க, நேத்தான் பட்டை பலம்.க, விழுதிப் பட்டை பலம்.க, இது வெல்லாம் நிழலுலத்தி நாள் செய்த பாலில் எருக்கம் பாலும் நல்லெண்ணெயும் விட்டு அரைத்து திரம் பயறு மாத்திரம் அரை மண்டலம் கொள்ளவும். கடித்த பாம்பு சாகும். கொஞ்சு விடத்தில் தீரும். மயக்கம் கொடுக்கவும். மோருஞ் சோறும் கட்டவும். கத்தரிக் காய் பூசணிக்காய் கிரந்தி பண்டமாகாது.

நல்ல பாம்புக்கு நசியம்:-

வெற்றிலை, உப்பு, மிளகு, சிறுநீரில் கட்டி நசியம் விடவும். எருக்கம் பால் தும்பைத் தழையும் உள்ளி வசம்பும் கட்டி நசியம் விடவும். இது கண்டது. குப்பை மேனி வேளை சிறுதும்பை நொச்சி இந்த நாலு இலையும் இப்பைப் பூண்டும் சிறு நீரில் கட்டி சீலையில் கட்டி முக்கிப் பிழிந்து செவியிலும் கண்ணிலும் காதிலும் மூக்கிலும் விட விடம் தீரும். பேய்ப் பீர்க்கந் தழையை கசக்கி நாசியில் விடவும். பேய்ப் பீர்க்கம் வேரை வாயில் போட்டுக் கொள்ளவும்.

பேய்ப் பீர்க்கங்காய் ஒரு கூடை காயை ஆய்ந்து நிழலுலர்த்தாக உலத்தி உலக்கைச் சத்தம் கேளா இடத்தில் போய் கீலைகளை பிடுங்கிப் போட்டு விரையை ஒதுக்கிப் போட்டுக் காலே மணியிட்டுக் கொண்டு உள்ளங் கையில் நக்கவும். வரிச் சூட்டிக்கு கிராணக்கல் காப்புக் கட்டி வேர் செடி காய் சமூலம் பொடி பண்ணி அந்தக் காலே விழந் தீண்டி மயக்கமானால் ரெண்டு நாசியிலும் மூக்கிலும் ஊதல் வைத்து ஊத விடம் தீரும்.

பாம்புக்கு அஞ்சனம்:-

புழுங்கலரிசியும் மிளகும் உரைத்துக் கண்ணிலிடவும். மூடக் கொத்தான் இலையும் நசுக்கி அஞ்சனமிடவும். கடித்த வாயில் நிற்கும். காருக் கடி கடித்தால் விடந் தீண்டியும் முலைப் பாலில் நசியமிடவும். சிறு பாம்பு கடித்த காரக் கடிக்கு பொரிசல் பட்டை வேர் பட்டை அரைத்து இள வெந்நீரில் உள்ளுக்குக் கொண்டு மறு காலும் பூசவும். காருக் கடிக்கு நதலைப் பூண்டு தழை கம்பரிசியில் காய்ச்சி தின்னவும்.

பாம்புக்கு:-

கள்ளிக்காய் வேர் அமாவாசை நாள் செதுக்கி உலரப் போட்டு வைத்துக் கொண்டு சிறு நீரிலாவது இள வெந்நீரிலாவது அரைத்துக் கொடுக்கவும். ஒரு திருப் பாலை வெந்நீரில் கொடுக்கவும்.

விடத்துக்கு அருகாறு நீட்டான் என்கிற குளிகை:-

கீரி சர்ப்பத்தை காத்துப் போய் பச்சை செடியில் பிறண்டு அந்தத் தழை யைப் பிடுங்கித் தின்று வந்தால் கீரிக்கு விடம் ஏறவில்லை. அந்த செடிக்குப் பேர் கீமா ரெல்லி அந்தத் தழையும் அதின் காய் அமாவாசை நாள் இருந்து பொழுது அந்தி நேரம் வாய் பேசாமல் பறித்து வந்து நல்லெண்ணெயாலே உமி நீராலே முக்கி அரைத்து பிறகு மருளாதி நாம்பல [illegible] குளிகை செய்து நிழலில் மூன்று நாளும் உலத்தி பின்பு அந்தி வெயிலில் உலத்திப் பேய்ச் சுரைக் குடுக்கையில் அடைத்து அமாவாசைக்கு எடுத்து நல்ல நாளும் உலத்தி விடம் தீண்டினால் நாகப் பாம்பு கிரியன் தீண்டினால் மூன்று உருண்டை உரைத்து உள்ளே கொள்ளவும். இரண்டு உருண்டை கண்ணிலே இடவும். மற்றப் பாம்பு கடித்தால் இரண்டு உருண்டை இடவும். விடத்துக்கு இதுவே குளிகை. இது கை கண்ட பலன். ~~விட்டிப் பாம்பு, தேள், பெருச்சாளி [illegible] கொக்கு, [illegible]~~

வீட்டில் பாம்பு, தேள், பெருச்சாளி எலி முட்டை கொக்கு, ஆவி போக மருந்து

வேலன் சூலமும் கருங் குங்கிலியம், சேங்கொட்டை, கோரைக் கிழங்கு நொச்சி இலை இவை சமன் கட்டி வீட்டில் [illegible] விட்டால் வாராது.

விரியன் கடிக்குக் குளிகை:-

புலிக் கருனைக் கிழங்கு சதிரக் கள்ளிப் பாலை விட்டு உலர்த்தி வைத்துக் கொண்டு கள்ளிப் பால் வார்த்தரைத்து உருண்டை பண்ணி இளம் வெந்நீரிலரைத்துக் கடிவாயிலிடவும். உள்ளுக்குங் கொடுக்கவும்.

ஊதுக் குளிகை: விடநாயன் குளிகை:-

நொச்சிக் கொழுந்து பேய்க் குமட்டிக் கொழுந்து சாட்டரனைக் கொழுந்து [illegible] கடப்பு சூலமும் [illegible] கொழுந்து அங்கடைக் கொழுந்து கையாந்தகரைக் கொழுந்து சிறு நாரத்தை விடத் தேரான் கொழுந்து வேப்பன் கொழுந்து வேலிப் பருத்தி வேலிப் பருத்தி இலை, பொரிசல் கொழுந்து இந்தப் பனிரெண்டு மருந்தும் ஒவ்வொன்றும் இரண்டு பிடியாகக் கொண்டு கட்டிக் கடைச் சரக்கு பெருங்காயம் கருஞ்சீரகம் இந்துப்பு வெள்ளை வெங்காயம் கம்பிலி அட்ட சாம்பல் இவையும் ஒவ்வொன்றும் கால் காசிடை கட்டிப் புசத தண்ணீர் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி பதனம் பண்ணி வைத்துக் கொண்டு பல்லி [illegible] நாக்கிருல் ஒரு உருண்டை வெந்நீரில் குடிக்கவும்.

வேறு குளிகை:-

பெருங்காயம், களர்ச்சி, ஓமம், சுக்கு, மிளகு, கருகு, வெள்ளை வெங்காயம், தம்பட்டை, வெளிச்சிறாம் பட்டை, பூதாள சக்கையாவதை, உப்பாவது [illegible] இவை ஒவ்வொன்றுக்கு காஞ்சி கட்டவும். வசம்பு காஞ்சி ½ பேய்ப் பீர்க்கு ஒரு பிடி விரும்பிக் கொழுந்து ஒரு பிடி, நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, உகாய்க் கொழுந்து ஒரு பிடி, பட மடக்கி ஒரு பிடி பேய் மிரட்டி ஒரு பிடி, சாட்டரனைக் கொழுந்து ஒரு பிடி, பறக் தாரங் கொழுந்து ஒரு பிடி, ஆலாங் கொழுந்து ஒரு பிடி இது வெல்லம் கருந் கழுதை ரத்தில் சாத்தில் அரைத்து குளிகை செய்து [illegible] இள வெந்நீரில் குடிக்கவும். [illegible]

தும்மி செட்டி குளிகை:-

ஆவிய கரந்தாளி பட மடக்கி மலைதாங்கி வேர், கை பிரம்பு பட்டை கல்சோலை சம்பை கோவைக் கிழங்கு அமுக்கிராங் கிழங்கு, நெட்டைப் பேய் மிரட்டி வேர், [illegible] வேர் பட்டை, பூதா சக்கை [illegible] சந்தனம் விலம்புளி வேர், சீத நெல்லிப் பட்டை விடத் தேரன் கொழுந்து நருண்டாள் கொழுந்து அரிந்சில் கொழுந்து அசி நாரத்தில் கொழுந்து ஆகப் பதினேழு கொழுந்து வகையும் கட்டிப் பெருங்காயம் நாலு வீராகனிடை வசம்பு சம் பழச் சாறு விட்டு அரைத்து அந்த மருந்து இடித்து நான் பண்ணிக் கொழுந்து வகையும் கட்டி இடித்த வட்டப் பேய் மிரட்டி தழை அகலத்துச் சாறு வார்த்து அரைக்கப் பெருங்காயம் கட அரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து வைத்துக் கொண்டு [illegible] இள வெந்நீரில் குடிக்கவும். சுபித்தியம் சுரம், சுக சன்னிக்கு சயித்தியம், வாய்வு, இதுக்கெல்லாம் ஆகும்.

உக்கிர மலிக் குளிகை:-

ஒப்பப மேனி நாய்ப் பாகல் நத்தச் சாட்டரனை [illegible] கொத்தான் [illegible] கள்ளில் இந்த ஒன்பது வகையும் பறித்து வந்து புளியஞ்சிராய் கொண்டு [illegible] பண்ணி புளியஞ் சிராய் குளியில் போட்டு எரிய விட்டு தனலான பின் செங்கல் குளியிலே ஒரு கோழி முட்டையை உடைத்து மஞ்சு மொட்டு பிறம்பாய் [illegible] மொட்டை அதில் ஒலிக்கி சாத்தி [illegible] [illegible] பிறபாடு [illegible] இறங்கத் தடவவும் போம்.

நிசபி.

[illegible] கிழங்கு மாத மொறுக்கால் [illegible] [illegible] உடம்புக்கும் [illegible] குளிக்கப் போடவும். [illegible] வேர், [illegible] வேர், [illegible] வேர், செப்பு நெருஞ்சி [illegible] நெல்லி வேர், [illegible] வேர் மலைதாங்கி வேர் அப்பைக் கிழங்கு வேர், [illegible] கிழங்கு அதளைக் கிழங்கு [illegible] சங்கி [illegible] கோமறாதப் பட்டை, பெருங்காயம் இவை யெல்லாம் அரைத்துக் குளிகை பண்ணிக் கொண்டு வெந்நீரில் குடிக்கவும். இதுக்கு யெல்லாம் பத்தி [illegible] [illegible].

எல்லாப் பிணி குளித்தக்கும்:-

[illegible] வகையாய் [illegible] பிடித்து நொந்தால் தவசி முருங்கை இலை [illegible] தலை [illegible] அலங்கவும். [illegible] மேலேறு வாங்கினால் தவசி முருங்கை வேரை அரைத்து வெள் வெங்காயம் வசம்பு, பெருங்காயம் கட்டி அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும். [illegible] பாட்டை நொந்து பேச்சில்லாமல் இருந்தால் [illegible] [illegible] இருந்தாலும் வயறு பொருமினாலும் உடம்பு இருசாய் திரிந்த உடம்பு [illegible] [illegible] திரட்டிப் [illegible] அரைத்து வெங்காயமும் கட்டி [illegible].

விக்கல் பொரி குளியத்துக்கு:-

குன்மம் குமதி எப்படியிட்டு இருந்தாலும் விக்கல போலே வாங்கி யிருந்தாலும

வயறு பலவிதமாக நொந்து உடம்பு காச்சல் வந்தாலும் குளிர் வந்தாலும் அடிக்கடி பயந்தாலும் கண் சிவந்தாலும் இதுக்கு மருந்து.

எட்டிப் பட்டை அலிஞ்சிப் பட்டை, மிளகறணைப் பட்டை, எருமுள்ளைப் பட்டை, வசம்பு, வெள்வெங்காயம், பெருங்காயம் கூட்டி அரைத்து இள வெந்நீரில் கலக்கி உள்ளுக்கு கொடுத்து மேலும் திமிரிடவும். வட்டப் பேய் மிரட்டி நெட்டைப் பேய் மிரட்டி உத்தாமணி, கருஊமத்தை, முடக் கொத்தான் சோம நாதப் பெருங்காயம், ஆனை வசம்பு, ஒருக் கொட்டைப் பூண்டு புது சுண்ணாம்பு இது வெல்லாம் துவைத்து மூன்று நாள் துவளையிடவும்.

சகல சூனியத்துக்கு :-

நாய் செத்த வீட்டிலே மண் நனைந்தது எடுத்து வந்து எண்ணெயில் கொதிப்பித்து காதிலும் விட்டு மேலுந் தவளையிடவும்.

மண்டை பில்லிக்கு :-

கள்ளி மேலே புல்லுருவி வேர் காதில் பிழியவும்.

மூடங்கு சூனியத்துக்கு :-

சென்ன கரிவேரை அரைத்து பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். உடம்பெங்குந் திமிரிடவும்.

மண்டை பில்லிக்கு :-

கொளிஞ்சி சமூலங் கொண்டு வந்து துவைத்து பசுவின் மோரில் பிசைந்து கோதை வடித்துப் போட்டு உலை கட்டிக் குறுவை அரிசியில் உப்பாக்கித் தின்னவும். இதில் பசுவின் நெய் வார்த்து அசனம் பண்ணவும்.

சூனியம் திமிருக்கு :-

அரவி வேர் சந்தனமாக அரைத்துப் பூசவும். சங்க வேர் அரைத்துப் பாலில் குடிக்கவும். சூலி தாமரை வேரை அரைத்து பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். காரெள்ளு இலவம் பிசினும் குதிரைக் குளம்பும் அரைத்துக் குடிக்க எரிப்பரி சூனிய மீளும்.

கோவைத் தண்டை துவைத்துப் பிழிந்து கொண்டு பூசனிக்காய் குடலை வாங்கிப் பிழிந்து கொண்டு சல்லை வெல்லம் போட்டுக் கொடுக்கவும்.

விலங்கு போட்ட சூனியத்துக்கு :-

வெடியுப்பும், யிடி விழுந்த மர நக்கி (கிடைஞ்சியிலையை) விழுது அரைத்து சாலடி தண்ணீரில் கரைத்து மேலெங்கும் பூச ஆணி பறியும். விலங்கு தெறிக்கும்.

பில்லி பேய் செத்து விழ :-

பேய்த் தும்பைச் சாறு உழக்கு, வெண்ணொச்சி சாறு உழக்கு, பெருங்காயம் இரு களஞ்சி அரைத்துக் கொடுக்கவும்.

புகை மருந்து :-

எருமைக் கொம்பு வெள்ளாட்டுக் கொம்பு மயிர் புகை காட்டவும்.

ஏவல் கட்டு சூனியத்துக்கு ஆணி முதரிக்க தவளையிட மருந்து :-

விளாம் பட்டையும் தழையும், கிலுவைப் பட்டையுந் தழையும், மஞ்டித் தழையுங் கோவைக் கிழங்கு தழையும் அலிஞ்சித் தழையும், பேய் மிரட்டித் தழையும், துளசித் தழையும், செங்கத்தாரி வேர், விழும்பி வேர், குப்பை மேனித் தழையும், அமுக்கிலாந் தழையும் வேரும், ஒருக் கொட்டைப் பூடு வெள்ள வெங்காயம், வசம்பு, கூட்டித் துவைத்து தவளையிடவும். பொட்டணங் கட்டி முகந்து கொள்ளவும். இதின் குணம் யிடுக்கு கீள் கால் கை யிரிச்சுக் கிடக்கும். தண்ணீர் குடித்தால் தித்திக்கும்.

சூனியத்துக்கு மருந்து :-

அலிஞ்சி வேர்ப் பட்டை கொழுந்து சங்க வேர்ப் பட்டை கொழுந்து, பொன்னுங்கண்ணி சமூலங் கொண்டு வந்து இடித்துக் காடியில் பிசைந்து ஒரு படி காடித் தண்ணீரில் போட்டு ஊற விட்டு பத்தா நாள் எடுத்துக் கொண்டு பனைவெல்லம் போட்டுக் குடிக்க வேணும். பிழிந்த தழையை எடுத்து தவளை யிடவும். கை கால் யெல்லாம் சூனியம் மீளும். சூனியத்தில் * சினி

சூனியத்தில் வொள்ளொடி நீரொட்டு :-

மலஞ் சுண்டை வேர் அரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்து ஒரு காசிடை உள்ளுக்கு கொடுத்து அந்தத் தழையை மேலெங்குந் திமிரிட சூனியம் மீளும். புலியொடி

ஒவலொடி நாய் போலே வருகிறதுக்கு :-

பறத்தேற யிலை சின்னி யிலை, குறுவை யரிசியிலேயிடித்து களிக் கிண்டி தின்ன சூனியம் முறியும். நீரில் நிற்கிற நீர்ப் பூலா வேரை அரைத்துக் காராட்டுப் பாலில் கொடுத்து மேலுந் திமிரியிட சூனிய முறியும்.

வெள்ளொடி நீரெடிக்கு :-

அப்பைக் கோவைக் கிழங்கு சோம நாதப் பெருங்காயம், ஒரு உள்ளி, வசம்பு, கூட்டி அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுந் திமிரிட வெள்ளொட்டி தீரும்.

நீரடிக்கு:-

கருஞ்சீரகம், எல்மும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து புங்கம் பட்டை நிலக் கடம்பு, வெள்ளை ஆவாரையிலை, வசம்பு ஒரு உள்ளி கட்டி அரைத்து மேலெங்குந் தலை யிடத் தீரும்.

ஏலலொடிக்கு:-

முக்குருந்தம் பட்டை தாழை வேர் மூன்று வகையுந் தூவத்த இள வெந்நீரில் பிசைந்து ஒரு சேரை கொடுக்கவும். நாய் போலே வருகிறதுக்கு:-

நாய்ப் பாகலிலை துவைத்து மேலுக்குந் திமிரிடவும். கொத்தான் இலையை அரைத்து வெல்லங் கூட்டி பசுவின் வெண்ணெயில் முழுங்கவும்.

ஏவல் பில்லிக்கு:-

கோளிக்காலிலை சமூலமும் அரைத்து வெல்லங் கூட்டி பசுவின் வெண்ணெயில் முழுங்கவும்.

கருவுமி போலே பூனை போலே வருகிறதுக்கு:-

கருங் குன்றுமணி வேருந் தழையு மரைத்து நல்ல வெல்லங் கூட்டிப் பசுவின் வெண்ணெயில் முழுங்கவும். வயல் ஊதிருல் வசலைக் கிழங்கு அரைத்துக் காடியில் கொடுக்கவும். முசுட்டை வேரரைத்துக் காடியில் கொடுக்கவும். அளிஞ்சி வக்கனை கற்கொளிஞ்சி யிலை வேரும் இலையும் அரைத்து காடியில் பிசைந்து தலையிட சூனிய மீரும். சந்தனம் அரைத்து மேலெங்குந் தலையிட சூனியந் தீரும்.

ஒடி சூனியத்துக்கு:-

வசம்பு, வெள்ளை உள்ளி, உத்தாமணி, சிறிய தக்காளி ரசம் பரவு முட்கா வேளையிலை நன்றாய் நிசம் பெறவே கடுகு அரைத்துக் கசக்கி மூக்கில் பிடிக்க ஒடி சூனியம் போமுடைந்து. ஒருகளசி

ஒரு கால் பிடிப்பு திமிர் உடைச்சல் சூனியத்துக்கு தவளை:-

சிந்திக் கொடியுடனே சித்தா முட்டித் தழையும் சாந்து பிறச் செய்து நீ தண்ணீ தனில் சேர்ந்து மிகக் கை கால் தலையிடக் கரு முடக்குச் சூனியமும் அய்யமில்லை ஓடிப் போமன்று,

சூனிய மீள்க்க:-

மருக்காரை வேர் வெட்டி எடுத்து கண்டங் கண்டமாக நறுக்கி வைத்துக் கொண்டு சந்தனம் போலே அரைத்து வெந்நீரில் சா கொடுத்து மேலுந் தலை யிட எந்தச் சூனியமும் தீரும். முதளைப் பூண்டு சமூலமும் துவைத்து திமிடத் தீரும். பேய் அத்தி வேர் அரைத்து தலையிடத் தீரும். சிறு தக்தி யிலை, விழுதி யிலை, வேலிப் பருத்தி யிலை துவைத்த சி_நீரில் அரைத்துக் காலெங்குந் தலை யிடவும். தீரும். பேய் அத்திக் கொழுந்து அரைத்து தலை யிடத் தீரும். மேல் வருவன வெல்லாம் மந்திரமும் யந்திரங்களும் ஆவதால் பிரதி செய்யாமல் விடப்பட்டன.

****

முற்றும்

****

சு.ச:3.1.1964.

341

26